பெலிஅத்த பிரதேச சபை - 2022
-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்த போதிலும், கடன் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் வழங்கியிருக்காத ரூபா 8,136,000 கடன் தொகையை ஆண்டிற்கான மூலதன வருமானம் என கணக்கீடு செய்திருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | மூலதன வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களுக்காக பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,529,124 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,512,008 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஆண்டு இறுதியில் உள்ளவாறு உடன்படிக்கை மேற்கொண்டு மீளாய்வாண்டில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத 02 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 1,500,000 தொகை கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 ஆண்டின் போது மாகாஹீல்ல கிழக்குப் பாதை துண்டுக் கற்கள் பதித்து அபிவிருத்தி செய்தல் நிர்மாண வேலைக்காக பெலிஅத்த பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகைக்காக ரூபா 520,002 தொகை கடன்பட்டோர் ஏற்பாடுகள் மிகையாக காட்டப்பட்டுள்ளது. | மீதியான ஏற்பாட்டுத் தொகையில் கப்புஸ்ஸாவல பெரிய கிணற்றுப் பாதை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளமையால் பெற வேண்டிய கடன்பட்டோர் மீதி கணக்கீடு செய்யப்பட்டது என. | கடன்பட்டோர் ஏற்பாடுகள் ஒதுக்குதல் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருட இறுதியில் உள்ளவாறு இருப்பு ரூபா 324,995 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் சரி செய்யப்படும் என. | வருடத்தின் இறுதி இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் நிரந்தர பதவியணிக்கு சம்பளம் கொடுப்பதற்காக உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து குறைவாக கிடைத்திருந்த ரூபா 95,060 தொகை பெற வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி மாதம் சம்பள மீளளிப்பின் போது சரி செய்யப்பட்டது என. | பேற வேண்டிய மீதிகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 209,105,585 தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 12,429,192 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 247,301,244 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | விரிவான தகவல்களை கொண்ட அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன என. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 134(1) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் இனங் காணக்கூடிய முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் கால ரீதியாக இனங்கண்டு வீதவரி அதிகாரப் பிரதேசம் மாற்றப்படக் கூடியதாக இருந்த போதிலும், சபை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதியப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 104(4) | 2020 நவம்பர் 29 திகதி கப் வண்டியின் முன்பக்க கண்ணாடியின் மீது மயில் ஒன்று மோதியதன் காரணமாக ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கை 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் தயாரித்திருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் காலப் பகுதியில் உத்தியோகத்தரை சேவைக்கு அழைத்தல் வரையறுக்கப்பட்டிருந்த மையால் இந்த அறிக்கை தயாரிக்க முடியாமல் போனதுடன், கொடுப்பனவிற்காக பொதுக் கூட்டத்தின் அங்கீகாரம் கிடைத்தது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 1645 (ஆ), (இ) மற்றும் 1646 | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் உரிய காலப் பகுதியில் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மீளாய்வாண்டு திசெம்பர் 31 அளவிலும் மேற்கொண்டிருக்காததுடன், எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாத கால வீச்சு 03 வருடங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக இருந்தது. | 02 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என. | சுட்டறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,077,515 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மொத்த மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,480,572 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 4,027,000 | 4,288,942 | 3,406,640 | 2,641,115 | 2,772,100 | 2,457,205 | 1,976,290 | 1,752,112 |
| வாடகை | 7,139,280 | 5,679,724 | 5,652,114 | 2,019,727 | 11,240,500 | 4,371,907 | 6,694,800 | 4,055,769 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 285,000 | 178,500 | 178,500 | - | 1,458,200 | 291,040 | 289,990 | 4,450 |
| ஏனைய வருமானங்கள் | 11,358,450 | 14,290,347 | 14,330,077 | 5,467,108 | 975,000 | 522,500 | 838,397 | 784,114 |
| மொத்தம் | 22,809,730 | 24,437,513 | 23,567,331 | 10,127,950 | 16,445,800 | 7,642,652 | 9,799,477 | 6,596,445 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி ரூபா 2,460,825 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிக்களத்திற்கு சென்று ஊர் மக்களை அறிவுறுத்தி நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 88 வர்த்தக அலகுகளில் இருந்து வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 148,250 | வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 45,050 தொகையினை பதிவழிப்பதற்கும் மீதியான | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் ஏக்கர் வரி ரூபா 31,040 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கு மற்றும் நிலுவை ஏக்கர் வரி எதிர் காலத்தில் அறவீடு செய்யப்படும் எனவும். | |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 34 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 1,783,497 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கம் கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் (தெற்கு) சுற்றறிக்கைக்கு இணங்க 15 கடையறைகள் தொடர்பாக ரூபா 3,837,500 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவீடு செய்திருக்கவில்லை. | 2023 ஜனவரி 17 திகதி தற்போதைய வாடகையாளர்களுக்கு ஒரே தடவையில் செலுத்தும் பணம் செலுத்தும் படி அறிவுருத்தியதுடன், எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 236,230 தொகை வர்த்தக உரிமையை வாடகைக்கு கொடுக்கும் வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபை பெலிஅத்த புதிய வர்த்தக தொடர் கட்டிடத்தில் வாடகையாளர்களுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி துணை வாடகை மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும், 2022 நவம்பர் 25 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது சபைக்குச் சொந்தமான 08 கடையறைகள் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | இந்த 08 கடையறைகள் தொடர்பாக மீண்டும் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், அங்கு கடை வாடகையாளரினால் துணை வாடகைக்கு கொடுக்காமல் பேணிச் செல்லப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 1,239,239 இற்கான வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 1,096,289 தொகை பல வருட காலம் முதல் காணப்படும் நிலுவைத் தொகை ஒன்றாக இருந்ததுடன், அதற்குரிய விபரங்கள் கண்டறிய முடியாமல் உள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 155,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஐ) | முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த 03 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 503,000 தொகை ஒரே | பெலிஅத்த புதிய வர்த்தக தொடர் கட்டிடத்தின் 02 மற்றும் 03 இலக்க கடையறைகள் தொடர்பாக | நிலுவை ஒரே தடவையில் செலுத்தும் பணம் விரைவாக அறவீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தடவையில் கிடைக்க வேண்டிய பணத்தினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரே முறையில் செலுத்தும் பணம் அறவீடு செய்வதற்காக மற்றும் 2022 ஆண்டின் போது வாடகைக்கு கொடுத்திருந்த கடையறை ஒன்றிலிருந்த பெற வேண்டிய ரூபா 65,000 தொகையை செலுத்தும் படி அறிவிக்கப்பட்டுள்ளது என. | வேண்டும். |
| (ஒ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 3,824,705 தொகையாக இருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹஹீல்ல சனசமூக நிலையத்தின் நீர் களஞ்சியத் தொட்டி நிர்மாணிக்கும் நிர்மாண வேலையின் கீழ் நீர் களஞ்சியத் தொட்டியின் நீர் ஒழுகுவதை தடுப்பதற்காக ரூபா 71,032 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்விடயம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயத்தை மீண்டும் நிறைவேற்றுமாறு சங்கத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டதுடன், அதனை நிறைவேற்றிய பின்னர் தடுத்து வைத்தல் பணம் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இந்த விடயத்தை நிறைவேற்றி செயற்திட்டத்தை வெற்றிகரமாக ஆக்க வேண்டும். |
| (ஆ) | பெலிஅத்த மஹஹீல்ல கட்டுஇம்புல்கஹதெனிய பொது கிணறு தயாரிக்கும் நிர்மாண வேலையின் கீழ் கிணற்றின் மேல் பகுதிக்காக கொங்கிரீட் மூடி போடுவதற்காக 12.2 சதுரமீற்றர்களுக்காக ரூபா 73,631 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்டிருந்த அளவு 8.2 சதுரமீற்றர்களாகும். இந்தக் கிணறு நிர்மாணிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும், கிணறு எவ்வித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தமையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 775,000 தொகை விளைவற்ற செலவொன்றாக இருந்தது. | ஏற்பாட்டுத் தொகை கிடைத்த பின்னர் மீதி விடயங்களை பூர்த்தி செய்து கிணற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றக்கூடிய விதமாக செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தனியார் நிறுவனம் ஒன்றினால் சபை வளாகத்தை சுத்தம் செய்யும் சேவை வழங்கப்படுவதுடன், 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு ரூபா 2,667,365 தொகையாக இருந்தது. சபையின் தற்போதைய பதவியணியின் வேலை வெளிக்களத் தொழிலாளர்கள் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் முறையே 8 மற்றும் 12 காணப்பட்டதுடன், அந்த மிகைத் தொழிலாளர்களை பயன்படுத்தி சபை வளாகத்தை சுத்தம் செய்யும் கருமத்தை நிறைவேற்றக்கூடியதாக இருந்த போதிலும் வெளி நிறுவனம் ஒன்றின் மூலம் இந்த சேவையை பெற்றுக்கொண்டுள்ளமையால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவும் சிக்கனமற்ற செலவொன்றாக இருந்தது. | மிகைச் சுகாதார தொழிலாளர்கள் அடிக்கடி விடுமுறை பெற்றுக்கொள்வதனால் அலுவலக வளாகத்தை சுத்தம் செய்வதற்காக ஊழியர்களை ஈடுபடுத்த முடியாதுள்ளது என. | சபையின் ஊழியர்கள் சபையின் கருமங்களுக்காக ஈடுபடுத்த முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |

### 3.3 இனங் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பெலியத்த மீனவர் கட்டிடம் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை ரூபா 9,000 என பெறுமதி மதிப்பீடு செய்திருந்த போதிலும் மாதாந்த வாடகை என ரூபா 5,000 தொகை 2021 ஜனவரி முதல் அறவீடு செய்வதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 96,000 ஆக காணப்பட்டது. | 2023 ஆண்டு ஜனவரி முதல் புதிய மதிப்பிட்டுத் தொகை அறவீடு செய்யப்படுகின்றது என. | பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் முன்னைய ஆண்டுகளின் போது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று நபர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 519,632 தொகையினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீதி மன்றத்திலிருந்து தகவல்கள் வேண்டப்பட்டுள்ளதுடன், அவை கிடைத்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் என. | பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டு திறந்த வெளியில் நிறுத்தப்பட்டிருந்த 03 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களில் கப் வண்டியொன்று திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டதெனவும், மீதியான 02 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்காக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | வாகனங்களை திருத்தி வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களின், 10 காணிகளின் மற்றும் கட்டிடங்களின், 07 சனசமூக நிலையங்களின் மற்றும் 03 மயானங்களின் சட்டபூர்வமான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள டிரக்டர் வண்டி தவிர மீதியான 08 வாகனங்களின் உரிமை மற்றும் காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்கித் தரும்படி பிரதேச செயலாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (இ) | பிரதேச சபையின் இடைச் சொருகல் துண்டுக் கற்கள் உற்பத்தி செய்யும் வேலைத் தளத்தில் மற்றும் தும்புக் கைத்தொழிற்சாலையை சேர்ந்த 02 மோட்டார்கள், 1000 லீற்றர் நீர்த் தொட்டி மற்றும் இடைச்சொருகல் துண்டுக் கற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரம் பல வருட காலமாக விளைவற்று காணப்பட்டது. | இரண்டு மோட்டார்களையும் ஏலவிற்பனை செய்த போதிலும் அதற்காக ஒருவரும் முன்வந்திருக்காததுடன், மீதியான இயந்திரத்தை சபையின் தேவைக்காக வைக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1 இற்கு இணக்கமின்றி கூட்டுப்பெறுமதி ரூபா 1,792,185 தொகைக்கான 05 வகையான பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்படுகின்றது என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெலிஅத்த கொட்டியாகொடல்ல பொது விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு ரூபா 3,424,834 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |

| | | |
|---|---|---|
| i. விளையாட்டுத் திடலின் மண் வெட்டப்பட்டு அடுக்கி ஏற்றுவதற்காக ரூபா 158,776 தொகை மற்றும் பக்கச் சுவர் நிர்மானிப்பதற்கான அடித்தளம் தயாரித்தல் அத்திவாரம் வெட்டுதல் என்பவற்றிற்காக ரூபா 41,174 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | 03 மண் அடுக்குதல் அளவை எடுக்கப்படாமையால் அளவைப்பத்திரத்தில் உட்படுத்தப்படவில்லை எனவும் மற்றும் கொடுப்பனவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மண் எண்ணிக்கையை விட $50m^3$ அகற்றப்பட்டிருந்தமையால் மேலதிக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டும். |
| ii. பக்கச் சுவர் மிருதுவான மேற்பரப்புடன் நிர்மாணிப்பதற்காக அலங்கிரப்பு வேலைக்காக ரூபா 285,048 தொகை கொடுப்பனவு செய்து செய்திருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச் சுவர் கடின மேற்பரப்புடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | பக்கச் சுவரின் முன்பக்கம் மென்மையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதன் விரிவாக்கல் பொருத்துக்கல் மாத்திரம் மென்மையின்றி காணப்பட்டது என. | மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட முறையில் பூர்த்தி செய்த விடயங்களுக்காக மாத்திரம் முழுத்தொகையும் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) கஹவத்தை ஜினதாஸ மாவத்தை அபிவிருத்தி செய்தல் கட்டம் - II நிர்மாண வேலையை செயற்படுத்துவதற்காக ரூபா 1,947,934 தொகை கொடுப்பனவின் போது, | | |
| i. பாதைக்காக 37.5 மில்லிமீற்றர் அளவான கற்கள் (ABC) வழங்கி தகர்த்து கனப்படுத்தும் கருமத்திற்காக பிழையான கூறுவிலைகள் பயன்படுத்தியமையால் ரூபா 156,860 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பாதை மேற்பரப்பில் ஒரே தடவையில் ABC போடப்படாமல் பகுதிகளாக ABC இடப்பட்டது என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. பாதைக்காக இடுவதற்கு தேவையான காபட் அளவினை விட மிகையாக இடப்பட்டது என குறிப்பிட்டு ரூபா 264,316 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பாதையை 09 மீற்றர் நீளம் மேலதிகமாக செய்யப்பட்டதுடன், 50 மில்லிமீற்றரை விட மிகையான கனத்தில் காபட் பரப்புதல் மேற்கொள்ளப்பட்டதென. | மிகையாக செலுத்தப்பட்ட தொகை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| iii. பாதைக்காக இடப்பட்டிருந்த 37.5 மீற்றர் அளவான (ABC) கற்கள் அழுத்தப்பட வேண்டிய அளவு நூறு அல்லது அதை விட கூடியதாக இருக்க வேண்டிய போதிலும் தரக் பரிசோதனை அறிக்கையின் படி, அழுத்தப்பட்டிருந்த அளவு 98 சதவீதமாக காணப்பட்டதுடன், கற்கள் வழங்கல் மற்றும் போக்குவரத்துக்காக ரூபா 220,325 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கற்கள் அழுத்தப்பட்டிருத்தல் சதவீதம் 98 சதவீதம் மற்றும் சேதமடைதல் ஏற்பட்டிருக்கவில்லை என. | உரிய சதவீதத்தின் படி கற்கள் அழுத்தப்பட வேண்டும். |
| (இ) கஹவத்த சொவ்ஸிரிபுர சனசமூக நிலையம் வலை மறைப்பு இடப்பட்டு நவீனமயப்படுத்தும் நிர்மாண வேலையின் கீழ் சனசமூக கட்டிடத்தின் | குறைபாடுகளை சரி செய்யும் படி ஒப்பந்தச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டதென. | கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் மதிப்பீட்டுக்கு இணங்க வேலை பூர்த்தி |

| | | |
|---|---|---|
| வலை மறைப்பு மற்றும் இரும்புக் கதவுகள் தயாரிப்பதற்காக ரூபா 429,807 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் வலை மறைப்புக்களில் மற்றும் கதவுகளில் துருப்பிடிக்காத சாயம் மற்றும் எனமல் சாயம் உரிய முறையில் பூசப்படாமையால் அந்த வலை மறைப்புக்கள் மற்றும் கதவுகளில் துரப்பிடித்தலுக்கு உள்ளாகியிருந்தது. | | செய்யப்பட்டிருக்க வேண்டும். |

**3.8 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியில் 13 பதவிகளுக்குரிய 66 ஊழியர் மிகையினை முறைப்படுத்திக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நாளாந்தச் சம்பளம் பெறும் 45 ஊழியர்கள் மற்றும் 25/2014 சுற்றறிக்கையின் மூலம் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்கள் உள்ளவாறான பதவியணியில் காணப்படுவதனாலே ஆகும். | மிகைகளை முறைப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |